*ஜூன் 9, 2015*

## ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது

இனிமையான குழந்தாய், நான் தன்னலமற்ற சேவகர். எந்த மனிதரும் தன்னலமற்ற சேவகராக இருக்க முடியாது. அவர்கள் பட்டினி கிடந்து இறக்க நேரிடும்! நான் பட்டினி கிடந்தது இரக்கமாட்டேன். நான் எதனுடைய பலனையும் அனுபவம் செய்வதற்கு அப்பாற்பட்டிருக்கின்றேன். நான் குழந்தைகளாகிய உங்களுக்கு உலகம் முழுவதற்குமான அரசுரிமையை கொடுக்கின்றேன். அதன் பின்னர் நான் சென்று ஓய்வெடுக்கின்றேன். என்னுடைய பங்கு ஒரு முடிவிற்கு வருகின்றது. அது பின்னர் பக்தி மார்க்கத்தில் மீண்டும் ஆரம்பமாகின்றது.

இனிமையான பாபா, இன்று நான் உங்களை தன்னலமற்ற சேவகராக நினைவு செய்வேன். நீங்கள் எதனுடைய பலனையும் அனுபவம் செய்வதற்கு அப்பாற்பட்டிருக்கின்றீர்கள், ஏனெனில் நீங்கள் தன்னலமற்ற சேவகராக இருக்கின்றீர்கள். நீங்கள் தன்னலமற்று இருப்பதால் நீங்கள் மிகவும் அழகாக இருக்கின்றீர்கள். நான் உங்களுடைய உயர்ந்த தன்னலமற்ற தன்மை மற்றும் என்னுடைய நல்வாழ்விற்காக உங்களுடைய எல்லையற்ற தூய அக்கறையை நினைக்கும்போது நான் ஆழமான நன்றி உணர்வை உணர்கின்றேன். உங்களுடைய ஒர் ஆசை எங்களுக்கு அரசுரிமையை கொடுக்க வேண்டும் என்பதாகும். நீங்கள் சேவை செய்யும் போது நீங்கள் எந்த ஒர் இழப்பீடு அல்லது நன்மையை எதிர்பார்க்கவில்லை. இது போன்ற களைப்பற்ற, தன்னலமற்ற சேவை செய்வதற்கு நன்றி.

## சமார்த்தி அல்லது சக்தி

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

## மனோ-விருத்தி அல்லது மனோபாவம்

பாபா ஆத்மாவிற்கு: நீங்கள் ஞானம் நிறைந்தவர் என்ற சிறப்பு இயல்பினால், ஒரு தாமரை மலர் போன்று அன்பு மற்றும் விடுபட்டு இருப்பதன் மூலம் சம்ஸ்காரங்களின் எந்த மோதலிலிருந்தும் உங்களை பாதுகாத்து கொள்வீர்களாக.

நான் ஒரு ஆன்மீக தாமரை மலரின் மனோபாவத்தை பராமரிக்கின்றேன் - சேற்றில் இருக்கின்றேன், ஆனால் சேற்றுக்கு அப்பால் இருக்கின்றேன், அன்பாகவும் பற்றற்றும் இருக்கின்றேன் நான் என்னுடைய வாழ்க்கையை என்னுடைய சொந்த அல்லது மற்றவர்களின் சுபாவங்களுக்கு அடிபணிவதிலிருந்து விடுதலை ஆக்கிகொள்கின்றேன். இந்த ஸ்மிருதியிலிருந்து பெறப்படும் சக்தியினால் நான் சமஸ்காரங்களின் மோதலிற்கு அப்பால் செல்கின்றேன். நான் என் உண்மையான இயல்பு எவ்வாறு பற்றற்று இருப்பது – என்பதை உணர்கின்றேன். இந்த புரிந்துணர்வோடு அனைத்து உறவுமுறைகளில் நான் ஒரு ஆன்மீக தாமரையின் மனப்பான்மையை பேணுகின்றேன்.

## திருஷ்டி அல்லது தூயப் பார்வை

பாபா ஆத்மாவிற்கு: குழந்தைகளாகிய நீங்கள் நறுமணம் மிக்க மலர்கள் ஆகும் பொருட்டு, உங்களை ஒரு(ஒர்)ஆத்மாவாக கருதி, தந்தையை நினைவு செய்யுங்கள். முட்கள் ஆகாதீர்கள். இங்கு அனைவரும் மிகவும் இனிமையான மலர்கள் ஆவார்கள், முட்கள் இல்லை. இது ஒரு தோட்டம். ஒரு தோட்டத்தில் நல்ல மலர்கள் உள்ளன. இந்த தோட்டத்தில் கூட, சிலர் முகலாயப் பூங்காவின் மிகவும் நல்ல மலர்கள்கள் போன்று முதல் தரமான மலர்களாகின்றனர்.

இன்று நான் அனைவரையும் அழகான ரோஜாக்களாக பார்க்கின்றேன். ஒரு ரோஜாவில் முட்கள் இருக்கின்றன. இருந்தாலும் அது மிகவும் அழகாக இருக்கிறது. நான் மலரை பார்க்க முடிவு செய்கின்றேன், முட்களை பார்க்க அல்ல. ஒரு ரோஜாவின் ஒவ்வொரு பாகமும் பயனுள்ளதாக இருக்கின்றது; நாம் ரோஜாவை பிடித்துக்கொள்வதற்கு நமக்கு தண்டு தேவையாகும். எனவே, நான் அனைத்திலும் இருக்கும் நம்மையை பார்க்க கற்றுக்கொள்கிறேன். நான் நல்ல விவேகத்துடன் என்னுடைய திருஷ்டியை மாற்றிக்கொள்வதன் மூலம் என்னால் நல்லவற்றை மட்டுமே பார்க்க முடிகின்றது. நான் இதை செய்வதில் கவனம்கொள்ளும் போது, என் திருஷ்டி எல்லோருக்கும் மகிழ்ச்சியை கொடுக்கின்றது. மேலும் அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது ஒரு கருவியாக ஆகிவிட்டேன்.

## ஓர் அலையை உருவாக்குதல்

*நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.*